**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–1

O.S.No. 328/2021

2025ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14ம் நாள் வாக்குமூலம் 1969ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. மணிமேகலை | வயது:46 |
| க/பெ. : திரு. நாகராஜ் | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

1ம் வாதி ஆஜர். 1, 3 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. 2ம் பிரதிவாதி தோன்ற தரப்பினராக உள்ளார். வாதி, 1, 3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் வாதி. முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| 8.8.2013 – நீலம்மாள், மணிமேகலை, மணிகண்டன் இடையே ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்த பத்திரம் | அசல் | **வா.சா.ஆ 1** |
| 4.9.2021 – வாதி, 1,2 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு | அலுவலக நகல் | **வா.சா.ஆ 2** |
| சட்ட அறிவிப்பை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் | **வா.சா.ஆ 3** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய அவகாசம் கோரியதால் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.02.14 18:56:46 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,

திருப்பூர்.